விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 25 துல் ஹஜ்தா: பிறை: 15 இதழ்: 140
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 09-07-1990

RECEIVED 1990

## கிழக்கில் பரவலாக சண்டை நடைபெறுகிறது

(திருமலை)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையே தொடர்ந்து கடும் சண்டை நடந்துவருகிறது.

திருகோணமலையில் தம்பலகாமம், கோவிலடி, ஆலங்கேணி, கிண்ணியா, கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் தாக்குதல்களை மேற்கொண்ட இராணுவத்தினர் 11 பொது மக்களைக் கொன்றுள்ளனர்.

கட்டைபறிச்சான் பகுதியில் 'கொங்கறீட்டிலான' பதுங்கு குழியிலிருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை இராணுவத்தினர் எதிர் கொளளமுடியாமல் பின்வாங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கண்ணி வெடிகள், பொறி வெடிகள், ஆட்களைத் தாக்கும் கண்ணி வெடிகள் போன்றவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இலங்கை அரசுப் படையினர் பல இடங்களில் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

கட்டைபறிச்சானுக்கு அருகாமையில் நடந்த அரசபடை விடுதலைப் புலிகளின் கடும் மோதல்களில் இடையில் சிக்கிக்கொண்ட பொதுமக்கள் 40 பேர் மூன்று படகுகளில் ஏறி கடல் மார்க்கமாகத் தப்பிச்செல்ல முயன்றபோது, கடற்படையினர் அவர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. படகுகள் சேதப்படுத்தப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில்

# முழுமுனைத் தாக்குதலை நடத்த முப்படையினர் திட்டம்!

## எந்த நேரத்திலும் நடைபெறலாம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் விமானப்படை, கடற்படை இராணுவ தரைப்படை கூட்டாக இணைந்து மும்முனைத் தாக்குதல்களை எந்தநேரத்திலும் முடுக்கிவிடும் திட்டம் இலங்கை முப்படைகள் மட்டத்தில் தீட்டப்பட்டுள்ளதாக இராணுவ உயர் வட்டாரங்களை ஆதாரம்காட்டி கொழும்பு பத்திரிகையொன்று முதல்பக்கச் செய்தி வெளியிட்டுள்ளது.**

யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகளின் வசமிருந்து மீட்டு எடுக்கும் நோக்கத்துடன் விமான, தரை, கடற் படையினர் ஒன்றிணைந்து இக் கடும் தாக்குதல்களை மேற்கொள்ளவிருப்பதாக நேற்று கொழும்பில் வெளியான மேற்படி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது!

வடமராட்சியில் இலங்கைப் படையினர் முன்னர் நடத்திய 'லிபறேஷன் ஒப்பறேஷன்' தாக்குதலைப் போன்று இது திட்டமிடப்பட்டு இருப்பதாக அறியப்படுகிறது.

குடாநாட்டைச் சுற்றியுள்ள கடற்பிராந்தியத்தில் முகாமிடும் பீரங்கிப் படகுகளிலிருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களும், விமான, ஹெலிகொப்டர்களிலிருந்து குண்டுவீச்சு மற்றும் துப்பாக்

(4ம் பக்கம் பார்க்க)

## ஞாயிற்றுக்கிழமையில் திறக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அகதிகள் தப்பிச்செல்வதை தடுக்கத் திட்டம்?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் முப்படையினரும் மும்முனைத் தாக்குதல்களை முடுக்கி விடும் பட்சத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் குடாநாட்டின் கடற்பிராந்தியங்களூடாக தமிழகத்துக்கு தப்பியோடிச் செல்வதை தடுக்கும் நோக்குடன், கடற்படை ரோந்து நடவடிக்கைகளை இலங்கை கடற்படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டுக்குத் தப்பியோடிச் செல்வதை தடுத்து நிறுத்தவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்படையினர் வெளிப்படையாக கூறினாலும் தமிழகத்துக்கு லட்சக்கணக்கான அகதிகள் செல்வதன்மூலம் இந்தியத் தலையீடு ஏற்பட்டு விடுவதை தடுக்கவே இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## கைதானவர்களின் கதி உடனடியாகத் தெரிவதில்லை!

(மட்டக்களப்பில்)

மட்டக்களப்பில் உப்போடை, மாமங்கம் ஆகிய பகுதிகளிலிருந்து 14 வயது தொடக்கம் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதாகி பொலிஸ் நிலையங்களுக்கும் இராணுவ முகாம்களுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

அதேநேரத்தில் இப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, வீடுவீடாக மாமங்கம், உப்போடை ஆகிய பகுதிகளில் கடும் சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

கைதுசெய்யப்பட்டு முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட இவர்களுக்கு என்ன கதி நேர்ந்துள்ளது என்பது இதுவரை தெரியவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதியும் கவலையும் நிலவுகிறது.

## யாழ். நகரில் நீர்விநியோகம் சீராக பலவாரங்கள் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஏற்பட்டுள்ள நீர்விநியோகத்தடை, சீர் அடைவதற்கு இன்னும் பல வாரங்கள் ஏற்படலாம் என யாழ். மாநகரசபை நீர் விநியோகப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகா

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் ஒன்றரை லட்சம் மக்கள் அகதிகளாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது 50,000 குடும்பங்களைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் மக்கள் அகதிகளாக உள்ளனரெனத் தெரியவருகிறது.

இவர்களுக்கான உணவு விநியோகம் தற்போது ஓரளவு சீர்செய்யப்பட்டு வந்தாலும், எதிர்வரும் கிழமைகளில் இது ஒரு பிரச்சனைக்குரிய விஷயமாக மாறக்கூடுமென யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களிலிருந்து நாளுக்கு நாள் அகதிகள் யாழ் நகருக்குப் பெருமள

(4-ம் பக்கம் பார்க்க)

## சந்தைப் பகுதியில் பொது பதுங்குகுழி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் இணைந்து நேற்று முன்தினம் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதியான கொக்குவில் சந்தைப் பகுதிக்கு அண்மையில் பெரிய அளவிலான பதுங்குகுழி ஒன்றை அமைத்தனர்.

இந்தப் பொதுப் பதுங்குகுழி அமைக்கும் வேலையில் ஈடுபட்ட மாணவ, மாணவியர்களுக்கு அப்பகுதி மக்கள், உணவு, தேநீர், குளிர்பானங்களை வழங்கி, உற்சாகமூட்டினர்.

## கண்ட இடத்தில் சுட உத்தரவு!

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டுவிடலாம் என்று அரசு அஞ்சுவதினால் சந்தேகத்துக்கு இடமானவர்களை கண்ட இடத்திலேயே சுட்டுக்கொல்லும் கடும் உத்தரவு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாணங்களிலும் இக்கடும் உத்தரவை பொலிஸார் அமுல் நடத்தும்படி, பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

## கட்டுவன் நோக்கி வந்த படையினர்மீது புலிகள் பலத்த எதிர்த் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியே வர முயற்சித்த இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தில் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், சிலர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை பலாலி முகாமிலிருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களுடன் கட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை பக்கம் சூட்டுச் சத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாம் பகுதியில் நேற்று ஞாயிறு நள்ளிரவு சுமார் ஒரு மணி நேரம் தொடர்ச்சியான குண்டுச் சத்தங்கள் கேட்டது. இடைக்கிடை விட்டு விட்டு துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டது. அதிகாலை 1 மணியளவிலும் சில சூட்டுச் சத்தங்கள் அப்பகுதியில்கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு-கிழக்கு யுத்தம்:
# தொண்டாவை தலையிடுமாறு இ. தொ. கா. கோரிக்கை

(அட்டன்)

''வடக்கு- கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்று வரும் யுத்தத்தில் தலையிட்டு அதனை முடிவுக்குக் கொண்டுவர அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

அட்டனில் இடம்பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க அரசியற் பிரிவு மகாநாட்டில் மேற்படி கோரிக்கை விடுக்கப் பட்டது.

''வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வழியமைக்கும் நோக்குடன் முதலில் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான திரு. எஸ் தொண்டமான் உடனடியாக தலையிட்டு ஆவன செய்யவேண்டும்'' என்று மேற்படி தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மக்கள் முன்னணி நிதி ஒதுக்கீடு

(நாவற்குழி)

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பாவின் வேண்டுகோளுக் கிணங்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உயர் பீடம் பச்சிலைப்பள்ளியில் உள்ள அறத்திநகர் கிராம அபிவிருத்திக்காக சிறுகைத் தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பச்சிலைப்பள்ளி வட்ட சபைத்தலைவர் திரு. பொன். தில்லைநாயகம் மேற்கொண்டுள்ளார். (107)

## அகதிகளுக்கு உதவி

(நாவற்குழி)

சென்மராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்காக தச்சந்தோப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் அவ்வூர் மக்களிடமிருந்து ஆறரைப் புசல்நெல் சேகரித்து தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சனிடம் கையளித்துள்ளனர். (107)

## நாட்டு நிலைமை
# அங்கும் இங்கும்

யாழ். மாவட்டத்திற்கு நிவாரண உதவித் தொகை அதிகரிக்கப்பட இருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

### சம்பளம் வரவில்லை

மத்திய, மாகாண அரசுகளிடமிருந்து சம்பளம் வந்து சேராததால், பல திணைக்களங்களின் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

### பீரங்கித் தாக்குதல்

வடபகுதிக் கடற் பிரதேசத்திலிருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் தொடர்ந்து நடத்தி வரும் பீரங்கித் தாக்குதலில் சுமார் 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிப்படைந்துள்ளனர்.

### குடிநீர் விநியோகம் தடை

மன்னார்ப் பகுதி மக்களுக்கான குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. இக்குடிநீர் விநியோகம் தள்ளாடி இராணுவ முகாம் ஊடாகவே செல்கிறது. இக்குடிநீர் விநியோகக் குழாய்களைச் சேதமாக்கி, அதிலிருந்து தமக்குத் தேவையான குடிநீரைப் பெற்றுக்கொள்கிறார்களாம்.

### இரு முஸ்லிம்கள் வெட்டிக் கொலை

திருமலை நகரத்துக்குள் சென்ற இரு முஸ்லிம் ஆசிரியர்களை ஊர்காவல் படையினர் வெட்டிக் கிணற்றில் போட்டுள்ளதாக கூறப்படுகிறது. இச் சம்பவம் கடந்த 25ம் திகதி நடந்துள்ளது.

### வழிகள் துண்டிப்பு

மன்னார் மாவட்டத்திற்கு தரைமார்க்கமாக செல்லும் இரு பாதைகளும் துண்டிக்கப் பட்டுள்ளன. இதனால் மக்கள் நகருக்குள்செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

### உணவுப் பொருள் விநியோகம்

உணவு முத்திரை ஜனசக்தி கார்ட்டுக்கான உணவுப் பொருள் விநியோகம் ஆகியவை இந்த மாதம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

### வீடுகளில் திருட்டு

குருநகர் கொட்டடிப் பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் திருட்டுகள் நடைபெற்றுவருகின்றன.

### கோரிக்கை

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பும் தேதியை நீடிக்குமாறு பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### உடைகள், உணவுப் பொருட்கள்

அவ்வப் பகுதிகளில் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு பயிலுநர் ஆசிரியர் ஒவ்வொரும், தங்களால் இயன்ற உடைகள். உணவுப் பொருட்கள் ஆகியவற்றை சேகரித்து கொடுக்குமாறு. பயிலுனர் ஆசிரியர் சங்கம் பணித்துள்ளது.

### வெகுஜன அமைப்பு வேண்டுகோள்

இடம் பெயர்வதில் அர்த்தமில்லை, பாதுகாப்பு நடவடிக்கை எடுங்கள் என்று முல்லை மாவட்ட வெகுஜன அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. அந்த வேண்டுகோளில் உணவைச் சேகரிக்குமாறும், நீரைச் சிக்கனமாக பாவிக்குமாறும். முதலுதவி பயிலுமாறும், பதுங்குகுழி அமைக்குமாறும் கேட்டுள்ளது.

### ஐஸ்கிறீம் தயாரித்தல்

பால், மா, சீனி போன்ற போன்ற பொருட்களை பயன்படுத்தி ஐஸ்கிறீம் தயாரித்தல் போன்ற தொழில்களைச் சிறிது காலம் நிறுத்திவைக்குமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

### பாதிக்கப்பட்ட அகதிகள்

திருமலை, கிளிநொச்சி, வவுனியா பகுதிகளைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட அகதிகள் கிளிநொச்சி ஜெயபுரம் பாடசாலையில் தங்கியுள்ளனர்.

### 5000 அகதிகள்

புடவைக்கட்டில் நிர்க்கதியாகவுள்ள 5000 அகதிகளை நேரில்வந்து பார்த்துஅவர்களை அங்கிருந்து மீட்கஅவசர உதவி வழங்குமாறு முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கபிரதிநிதியிடம் கோரியுள்ளது.

### வைத்தியஅதிகாரி பணிமனை

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுற்றயல் கூறுப்பகுதி தற்போது தற்காலிகமாக பளையில் இயங்குகிறது.

## யாழ். பல்கலைக்கழகம்
# மருத்துவ பீட பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டாம் வருட பரீட்சை (1990 மே மாதம்) முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:

2-ம் வகுப்பு சித்தி: செல்வி ஏ. நடராஜா, எம். அகிலன். ஈ. தேவநேசன், வை. கணேஸ்வரன், செல்வி ஐ. சச்சிதானந்தவேல், செல்வி ஐ. எச். அன்டீன் அலிம். செல்வி ஜே. பரம்சோதி, என். ஜெயகுமாரன், செல்வி எம். ஜே. கந்தையா, பி லக்ஷ்மன், செல்வி எம். செல்வநாயகம், பி. புஷ்பகுமார், செல்வி என. எஸ். சபையா, செல்வி ஆர். இராசையா. எஸ். விசாகன் ஜோகேந்திரன்.

சித்தி: செல்வி பி. கே. இராமலிங்கம், செல்வி சி ஜே. சூசைப்பிள்ளை, செல்வி எவ். எவ். முகமட் ஐவ்பார், ஜி. நிர்மலன் ரட்ணம், செல்வி ஜே. சந்திரசேகரர், கே. சுப்பிரமணியம். செல்வி கே. சிவசிதம்பரம், செல்வி கே. எஸ். ஜோகநாதன், செல்வி எல். நவநீத ஐயர், செல்வி எம். மகேந்திரராஜா, எஸ். மணிவண்ணன், செல்வி எம். எஸ். செல்லையா, செல்வி ஆர். ரட்ணம், செல்வி ஆர். சிற்றம்பலம், ரி. சத்தியசீலன், செல்வி எஸ். பாலசுப்பிரமணியம், செல்வி எஸ். சண்முகானந்தன், செல்வி எஸ். கோபாலபிள்ளை, செல்வி எஸ். சிவநேசபிள்ளை, எஸ். சிவதாஸ், செல்வி எஸ். கணேஷ், செல்வி எஸ். தியாகராஜா, செல்வி ரி. மகாலிங்கம், ரி. உதயகுமாரன், எஸ்.வாசுதன் வி. குலசிங்கம், செல்வி வை. பீதாம்பரன், செல்வி ஆர். ஜோகேந்திரன். கே. முகுந்தன், ஏ. கணேச பஞ்சன் செல்வி யு. ஸ்ரீபதி, எஸ், எம். அக்பர் அலி, எவ். எஸ். வெற்றிநாதன், எஸ். அருட்செல்வன், ஏ. எம். அருட்செல்வம், சி. நீதிராஜன், செல்வி ஆர். ராஜேந்திரம், ரி. சுரேஸ்குமார்.

குறிப்பிட்ட சில பாடங்களுக்கு மீள்பரீட்சைக்கு தோற்றுவோர்: கே. அன்னராஜ், கே. அருணன், டபிள்யூ. தினேஷ். எஸ். ஜீவதாஸன், செல்வி கே. சண்முகநாதன். கே. கிரிதரன், எஸ், கோகுலேந்திரா, செல்வி எம். ராஜேந்திரம், ஏ. மதிவண்ணன், எம். எம். முகமட் பஹீம், வி. பரசுராமன், ஏ பி. கிஷ்கன், ஏ. ரமேஷ், என் ரமேஷ், பி. ரமேஷ், எஸ் ராம் மனோகர், செல்வி எஸ் எம். முகமட் கலீல், பி. சுகந்தன், செல்வி எஸ். நடராஜா. என். ஜேம்ஸ் ஞானசுதன்.

குறித்த சில பாடங்களுக்கு மீண்டும் மீள் பரீட்சைக்கு தோற்றுவோர்; செல்வி சி. பி. கனிகநாதன், எஸ். திலக்ராஜ்குமார். (சி)

## வைத்தியசாலை அபிவிருத்தி சபை

(நாவற்குழி)

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஐந்து பேர் கொண்ட அபிவிருத்திச் சபையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நோயாளர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்களான திருவாளர்கள் த. நவரத்தினராசா, இ. சின்னத்தம்பி, க. சபாரத்தினம், டாக்டர் பே. பிலிப், டாக்டர் எஸ். அருளானந்தம் ஆகியோர் இவ் அபிவிருத்திச் சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்களாக திருவாளர்கள் த. நவரத்தினராசா, இ. சின்னத்தம்பி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு இதுபற்றி வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (107)

## சுகாதார ஊழியர்களின் சம்பளம்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஜூன் மாத சம்பளம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ். விக்ரோறியா வீதியில் இயங்கி வந்த யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகம் தற்போதைய பதற்ற நிலையை முன்னிட்டு கோண்டாவிலில் உள்ள தனியார் வீடு ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சம்பளம் வழங்கும் வேலைகள் யாவும் கோண்டாவில் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகின்றது.

வைத்தியசாலைக்குகாசோலைகள் மூலமே சம்பளம் முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றது. வைத்தியசாலைகளினதும் மற்றும் சுகாதார நிறுவனங்களினதும் பொறுப்பதிகாரிகள் நேரில் சென்று தங்கள் சம்பளப் பட்டியல்களை பெற்று வருகின்றனர். (72)

# ஆஸ்பத்திரி மூடப்பட்டதால் நோயாளர் அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளதையடுத்து அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் பெரும் அவஸ்தைப்படுகிறார்கள்.

பல நோயாளர்கள் பராமரிப்பு எதுவுமற்ற நிலையில் வீதிகளிலும், பொது இடங்களிலும் தங்கி வருகிறார்கள்.

இதனால் இந்நோய் ஏனையவர்களுக்கும் தொற்றக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# புலிகளைத் திருப்திப்படுத்த அரசு முயற்சிக்கிறதாம்

(கொழும்பு)

''வடக்குக்-கிழக்குமாகாண சபை ஆட்சியின்போது ஈ. பி. ஆர். எல். எவ். பலதவறுகளை இழைத்திருக்கலாம். அதற்காக மாகாண சபையைக் கலைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொள்ளத் தேவையில்லை. மீண்டும் மாகாணசபையை நிருவகிக்க ஈ. பி. ஆர். எல். எவ்.வுக்கு அதிகாரம் வழங்கப் படவேண்டும் என்று திரு. வாசுதேவா நாணயக்காரா கடந்த வெள்ளிக்கிழமைநடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

### வரதராசப்பொருமாள் கடமையிலிருந்து தவறினர்

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. அத்துலத்முதலி பேசுகையில் கூறியதாவது:-

''ஐக்கியசோஸலிஷ தலைவர்களிடையே ஒற்றுமையுமில்லை, பிரிவினையுமில்லை என்பது வாசுவேவ நாணயக்காராவின் பேச்சிலிருந்து புலனுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ். ஆட்சி மீண்டும், வடக்கு கிழக்கு மாகாணத்தில் வரவேண்டும் என்றூர் திரு. வாசுதேவ நாணயக்கார. 'தனிநாடு' பிரகடனம் செய்த அவர்களுக்கு எவ்வாறு மீண்டும் மாகாண சபையை ஆட்சிசெய்ய அதிகாரம் வழங்க முடியும் கொடுத்த பொறுப்பினை ஒழுங்காக செயற்படுத்தாமல் தமது கடமையிலிருந்து முதலமைச்சர் திரு.வரதராஜப்பெருமாள் தவறு இழைத்தார். அதனால் தான் மாகபணசபை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் செயலிழந்தது.

''இத்தகைய சூழ்நிலையிலேயே மாகாணசபை திருத்தச்சட்ட மூலத்தைக்கொண்டு வரவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதனை எதிர்க்கட்சியினர் கருத்தில் கொள்ளவேண்டும்.''

### விடுதலைப்புலிகளை திருப்திப்படுத்த...

ஜனப் ஹலீம் இஸாக் உரையாற்றும்போது;

''அரசாங்கம் இவ்வளவு காலமும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் ஒருவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லை. எமது பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. எதிர்க்கட்சியினருக்கு இவர்களுக்கிடையேநடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்து எதுவும்தெரிவிக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் லட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர். இன்னும், நீங்கள் விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தவே பார்க்கிறீர்கள். இத்தகைய போக்கை விடுத்து இப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வை காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

## மாவிட்டபுரம்
# வருடாந்த மஹோற்சவம் தொடர்ந்து நடைபெறுகிறது

(வட்டுக்கோட்டை)

சரித்திரப்பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் ஸ்ரீகந்த சுவாமியார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த ஜூன் மாதம் 27ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இக்கோவில் திருவிழாக்கள் கொடியேற்றத்தைத் தொடர்ந்து வழமைபோல் இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இக் கோவில் வேட்டைத் திருவிழா இம்மாதம் 18ம் திகதி புதன்கிழமையும் சப்பறத்திருவிழா 19ம் திகதி வியாழக்கிழமை பஞ்சரதத் திருவிழா 20ம் திகதி வெள்ளிக்கிழமை, தீர்த்தத்திருவிழா ஆடி அமாவாசை தினத்தன்று 21ம் திகதி சனிக்கிழமையும், மாம்பழத்திருவிழா 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடை பெறவுள்ளன.

மேற்படி மஹோற்சவ ஒழுங்குகளை ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மேற்கொண்டுள்ளார். (139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கரிபால்டி ஒரு தோற்கடிக்க முடியாத மனிதர்; துப்பாக்கிக் குண்டுகூட அவர் மீது பாயாது!"

## விடுதலை வீரனின் வாழ்க்கை வரலாறு

(நேற்றைய தொடர்ச்சி)

தென் அமெரிக்காவிலே ஆறு ஆண்டுகளாக அந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட கரிபால்டி அமைதியாக வேறு எங்காவது ஓரிடத்திற்குச் சென்று குடும்பத்தை நடத்த எண்ணினான். ஆனால்-

உலகம் அவனுக்கு அமைதியைக் கொடுக்கவிரும்பவில்லை! உழைப்பதற்காகவே பிறந்த அந்த உத்தமனுக்கு ஓய்வு கிடைக்கவில்லை!

அவனுக்கும் ஓய்வு பிடிக்கவில்லை.

சுதந்திரப் போர் தொடங்கிய உருகுவே நாடு, போரில் ஈடுபட்டுத் தனக்குத் துணை செய்யும் படி கரிபால்டியை அழைத்தது. உலக வரலாற்றிலே பல வீரர்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டதை நாம் படிக்கின்றோம்.

என்றாலும் —

கரிபால்டியைப் போல் உலகில் எந்த நாடு சுதந்திரப் போரைத் தொடங்கினாலும் அந்த நாட்டுக்குச் சென்று தான் பாடுபட்டதாக வரலாற்றிலே நாம் காணமுடியாது.

கரிபால்டியும் அவனுடைய தோழர்களும் உருக்குவே நாட்டு சுதந்திரபோரிலேசெய்திட்ட தீரவீரச் செயல்கள் உலக வரலாற்றில் பெரும் புகழ் பெற்றவை.

சின்னஞ்சிறிய நாடான உருகுவே நாடு சுதந்திரம் பெற்றதற்குக கரிபால்டிதான் காரணம்! உருக்குவே மக்கள் கரிபால்டிக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் அவனுக்குத் தளபதிஎன்ற பட்டத்தையும், ஏராளமான நிலங்களையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். ஆனால்-

"சுதந்திரத்திற்காக நான் போராடியது பலனை எதிர்பார்த்தோ பட்டத்தை எதிர்பார்த்தோ அல்ல" என்று கூறித் தனக்குக் கிடைத்த பட்டத்தையும் நிலங்களையும் வேண்டாமென்று கூறிவிட்டான் கரிபால்டி! அவன் அன்று கூறிய வார்த்தைகளைப் படித்தால் இன்றும் நாம், வரலாறு இப்படி ஒரு தன்நலம் இல்லாதவனைக் கண்டதில்லை என்பதைச் சொல்லிட முடியும்!

மரணதண்டனை விதிக்கப்பட்ட கரிபால்டி, இத்தாலியிலிருந்து வெளியேறிப் பதினைகு ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவனுக்கு நாற்பத்தியொரு வயதாகிவிட்டது! அப்போது இத்தாலியின் ஒருபகுதியை ஆண்டுவந்த சார்டீனிய மன்னர் சார்லஸ் ஆல்பர்ட், மக்களுக்கு ஆட்சிச் சுதந்திரம் அளிக்கத் தயார் என்றுகூறிய தித்திக்கும் செய்தி கரிபால்டியின் காதுகளுக்கு எட்டியது. மேலும் ஆஸ்திரிய ஆட்சியினின்று விடுதலை பெற்றிட மக்களுக்கு உதவத்தான் தயார் என்றும் சார்டீனிய மன்னர் அறிவித்திருந்தார்.

### 56 பேருடன் புறப்பட்டான்

கடல் கடந்து வாழ்ந்த கரிபால்டியின் காதுகளில் இந்தச் செய்தி விழுந்ததும் களிப்பு மிகக் கொண்டான். தன்னுடைய தாய் நாட்டை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் காலம் வந்துவிட்டதே என்று மிக மகிழ்ந்தான். உடனே தன்னுடைய ஆட்களிலே ஐம்பத்தாறு பேர்களைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டு நீஸ் நகரத்திற்குப் புறப்பட்டான்!

சார்டீனிய நாட்டு அரசரைப் பார்க்கப் புறப்பட்ட கரிபால்டி, தன்னுடைய கப்பலில் அந்த நாட்டுக் கொடியைப் பறக்கவிட எண்ணினான். ஆனால் கொடி தைக்கப் புதிய துணி அவனிடம் இல்லை. உடனே அவன் மனைவி, ஜன்னல் திரைச் சீலையையும், கரிபால்டியின் பழைய சிவப்புச் சட்டை, பச்சைக்கால் சட்டை ஆகியவைகளையும் சேர்த்து ஒரு சார்டீனிய நாட்டுக் கொடியைத் தயார் செய்து கொடுத்தாள். அந்தச் சுதந்திரக் கொடியின் கீழ் தாங்கள் என்னென்ன வீரச் செயல்கள் புரியப்போகிறோம் என்பதைப் பற்றிக் கரிபால்டியும் அவனுடைய தோழர்களும் கப்பலிலே பேசிக்கொண்டு சென்றார்கள்.

நல்ல சிவப்புக் கோடிட்ட வெள்ளை உடைகளை அணிந்து கொண்டு ஒரு மாவீரனின் கம்பீரத்துடன் கரிபால்டி சார்டீனிய மன்னர் முன்தோன்றினான்!

### தீவிர குடியரசுவாதி

கரிபால்டி ஒரு தீவிரக் குடியரசுவாதி. அவனுடைய தீவிரச் செயல்களுக்குத் தன்னால் ஈடுசெய்ய முடியாது என்று எண்ணிய சார்டீனிய மன்னர், கரிபால்டியின் உதவியை ஏற்க மறுத்துவிட்டார்!

எனவே இரண்டாம் முறையும் கரிபால்டி ஏமாற்றமடைந்தான்! ஏமாற்றங்களையும், தோல்விகளையும் கண்டுகரிபால்டிகலங்கவில்லை. இன்னல்களும் இடுக்கண்களும் அவனுடைய இலட்சியத்திலே இருந்த நம்பிக்கையைப் போக்கிவிடவில்லை. மாறாக் தோல்விகள் அவனுடைய உறுதியை ஊக்குவித்தன. இலட்சிய தாகத்தை இறுகச் செய்தன.

விடுதலை வேட்கையை எவ்வளவு நாட்களுக்கு அடக்கி வைக்க முடியும்! மக்களின் புரட்சியைச் சமாளிக்க முடியவில்லை. 1849-ம் ஆண்டு ஏப்ரல் 28-ம் திகதி ரோம் நகரம் குடியரசாக அறிவிக்கப்பட்டது. உடனே கரிபால்டியும் அவனுடைய தோழர்களும் அங்கே சென்று அந்த நகருக்குப் பாதுகாப்பு அளித்தார்கள்.

ரோம் நகரின் சுதந்திரப் போராட்டத்தில் இலங்கிலாந்தும் பிரான்சும் நடுநிலைமை வகிக்கும், அவைகள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள மாட்டா என்று கரிபால்டி எண்ணினான். ஆனால் போப்பாண்டவருக்கு உதவியாகப் பிரெஞ்சுப்படை வந்தது. மூன்றுமாத காலம் மக்கள் அப்படைகளை எதிர்த்து வீதிகளிலே போர் புரிந்தார்கள்! முடிவிலே-

இறுதியில் குடியரசுவாதிகள் ஒடுக்கப்பட்டார்கள். கரிபால்டி தோற்றான். போப்பாண்டவர் மீண்டும் ரோமாபுரியை ஆட்சி செலுத்தத் தொடங்கினர்.

### சரணடையமறுத்தான்

கரிபால்டி சரணடைய மறுத்து விட்டான். அவன் தன்னுடைய வீரர்களுடன் குதிரையில் ஏறிக்கொண்டு வெனிஸ் நகரமும் பணியாது. கரிபால்டியும் பணியமாட்டான்! விருப்பமுள்ளவர்கள் என்னுடன் வாருங்கள். இத்தாலி நாடு நம்மைவிட்டு என்றும் எங்கேயும் போகாது. என்று வீரமுழக்கம் செய்தான்!

அவனும் அவனுடைய தோழர்களும் ஆபத்துக்கள் அதிகமுள்ள மலைக் கணவாய்கள் வழியாகத் தப்பிச் சென்றார்கள்!

இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலே கரிபால்டியின் மனைவி அனீட்டா திடீரென்று இறந்து போனாள்!

தன்னுடைய வீராங்கனையான மனைவியை இழந்தது பெரும் பேரிடியாக இருந்தது கரிபால்டிக்கு!

கரிபால்டி மனம் நைந்து போனான். தாங்க முடியாத இந்தத் தாக்குதலால் கரிபால்டி கலங்கினான். இது போன்ற சொந்த விருப்பு வெறுப்புக்கள் கரிபால்டியினுடைய மகத்தான சுதந்திரப் பணியின் வலுவைக் குறைக்கும் என்று சொல்லி அவனுடைய நண்பர்கள் அவனைத் தேற்றினார்கள்.

### மக்களாட்சி மலர..-

நண்பர்களால் ஒருவாறு தேறுதல்பெற்ற கரிபால்டி, மீண்டும் தன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கான வழி வகைகளை ஆராய்ந்தான். அவன் அமெரிக்காவுக்குச் சென்று இத்தாலியை விடுவிப்பதற்கான வாய்ப்புகளைப் பற்றி ஆராய்ந்தான். தான் இறப்பதற்கு முன் தன்னுடைய தாயகமான இத்தாலியில் மக்களாட்சியை மலர வைக்கவேண்டுமென்ற உறுதியுடன் ஓயாது அதற்கான அத்தனையையும் அவன் செய்து வந்தான்.

அமெரிக்காவில் நான்கு ஆண்டுகளைக் கழித்த கரிபால்டி மீண்டும் தன் தாயகமான இத்தாலிக்குத் திரும்பி வந்தான்.

தொகுப்பு
எஸ். ஆர்

இத்தாலியில் இருந்த கரிபால்டியின் தாய் இறந்துவிட்டதால் அவளிடம் வளர்ந்து வந்த மூன்று குழந்தைகளையும் பராமரிக்கவேண்டிய பொறுப்பு கரிபால்டிக்கு வந்து சேர்ந்தது.

சார்டீனியா கடற்கரைக்கு அருகே கெப்ரேரா என்ற தீவில் தன் குடும்பத்தோடு கரிபால்டி வாழத் தொடங்கினான்.

கரிபால்டி தாய்நாடு திரும்பிய அந்த நேரத்தில் மூன்றாம் நெப்போலியன் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தான். இத்தாலிய ராஜதந்திரியான கவூர் என்பவர் இத்தாலி ஆஸ்திரியாவின் பிடியிலிருந்து விடுபட இதுதான் நல்ல சமயம் என்று எண்ணினார். உடனே அவர் கரிபால்டியை வரவழைத்தார். கரிபால்டியுடன் கலந்தாலோசித்தார்.

உடனே கரிபால்டியை ஆல்ப்ஸ் மலைப் பிரதேசத்திற்கு மேஜர் ஜெனரலாக்கி ஆஸ்திரியாவுக்கு எதிராக விடுதலைப் போரைத் தொடங்கும்படி செய்தார்.

கரிபால்டியின் தலைமையில் இத்தாலி திரண்டது! எழுந்தது! கர்ஜனை செய்தது. உறுமியது!

### வீரப்போர் புரிந்தார்கள்

கரிபால்டி போட்டுக் கொண்டிருந்த பச்சைக் கால் சட்டையும், சிவப்புச் சட்டையும் மக்களுக்குப் புரிந்துணர்வையும், புது வேகத்தையும் அளித்தன. இத்தாலி மக்கள் வீரப்போர் புரிந்தார்கள்.

போரிலே கரிபால்டி காட்டிய திறமையும், துணிவும் கரிபால்டியின் பெயரை ஆஸ்திரியாவுக்குச் சிம்மசொப்பனமாகிவிட்டன! அதே நேரத்தில்-

விடுதலை வீரர்களுக்கும், அடிமை இத்தாலிக்கும் கரிபால்டியின் பெயர் நம்பிக்கை நட்சத்திரமாக, உணர்வை ஊக்குவிக்கும் மந்திரமாக இருந்தது.

ஆதிக்கவாசிகளுக்கு வீசும் புயலாக தோன்றிய கரிபால்டி அதேநேரத்தில் விடுதலை விரும்பிகளுக்குக் குளிர்ந்த தென்றலாக தோன்றினான்.

ஆஸ்திரியாவின் ஆதிக்கப் பிடி தளர்ந்தது. ஆஸ்திரியப் படைகள் இடத்தைக் காலி செய்துவிட்டு ஓடின.

இத்தாலி ஒன்றுபட்டது. இத்தாலி முழுவதும் ஒன்றுபட்டது. பல அரசுகளின் ஆதிக்கத்திலிருந்து இத்தாலி ஒன்றுபட்டது.

கரிபால்டியும், விடுதலை விரும்பிகளும் மிகமட்டில்லாத மகிழ்ச்சி கொண்டார்கள்.

மக்கள் கரிபால்டியைக் கண்டிட மலைப்பிரதேசங்களிலிருந்தும், காட்டுப் பகுதிகள் இருந்தும் கூட்டம் கூட்டமாக ஓடிவந்தார்கள்!

### வாழவைக்க வந்த தெய்வம்

நாடு விழாக்கோலம் பூண்டது. பெண்கள் சிவப்பு உடைகள் அணிந்தனர். ஆண்கள் தங்கள் தொப்பிகளில் சிவப்பு இறகுகளைச் செருகிக் கொண்டார்கள். கரிபால்டியின் வீரப்படை ஒரு நகரத்தில் இருந்து மற்றொரு நகரத்திற்கு சென்றபோது வழிநெடுக மக்கள் அவரை வரவேற்று ஆரவாரம் செய்தார்கள். கரிபால்டியைச் சுதந்திரத் தந்தையாக, தங்களை வாழவைக்க வந்த தெய்வமாக மக்கள் எண்ணினர்கள்.

"கரிபால்டி ஒரு தோற்கடிக்கமுடியாத மனிதர் 'துப்பாக்கிக் குண்டுகள் கூட அவர் மீது பாயாது' என்று மக்கள் கருதினர்கள்! கத்தினர்கள்!

கரிபால்டி விரும்பி இருந்தால் இத்தாலி நாடு முழுவதற்கும் தானே ஒரு சர்வாதிகாரியாக விளங்கி இருக்கலாம். ஆனல் அந்த தூயவனுக்கு அந்த விதமான பேராசை எதுவும் இருந்திடவில்லை. போராட்டம் முடிந்தவுடன் கரிபால்டி தன்னுடைய பதவிகளை எல்லாம் துறந்தான். தான் வென்ற நாடுகளையெல்லாம் இத்தாலிய மன்னரிடம் ஒப்படைத்துவிட்டுக் கெய்ரே தீவிலுள்ள தன்னுடைய வீட்டிற்குத் தன்னந்தனியனாக எதுவும் இல்லாதவனாகப் போய்விட்டான் கரிபால்டி.

கரிபால்டி சாகும்போது எதையும் விரும்பாதவனாக, எதுவும் இல்லாதவனாக இத்தாலி முழுவதும் கதறிக்கதறி அழ இறந்துபோனான்.

(முற்றும்)

# ஓய்வூதியப் பணம்
## தாமதமாகவே கிடைக்கும்

(மானிப்பாய்)

இம் மாதத்திற்குரிய ஓயவூதியப் பணம் காலதாமதமாகவே கிடைக்குமென்று தெரிவிக்கப் படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக கொழும்பு சென்று ஒய்வூதிய வவுச்சர்களைப்பெறமுடியாதிருக்கிறது. என்று செயலக உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(71)

# "எமது போராட்டம் எக்காரணம் கொண்டும் இனி ஓயப்போவதில்லை!"

\- யோகி

(யாழ்ப்பாணம்)

"எமது போராட்டம் எக்காரணம் கொண்டும் இனி ஓயப்போவதில்லை என்று கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது: தமிழீழ மீட்பில் ஈடுபடும் விடுதலைப்புலிகள். அரசபடை வான்படை, சிங்களக் காடையர், இவர்களுக்கெல்லாம் முகங்கொடுக்கவேண்டியுள்ளது. ஆகவே எமதுபடைபலம் மேலும் பல மடங்கு பெருக வேண்டும். ஆயுதபலமும் அதிகரிக்கப்படவேண்டும் இதற்கு நீண்டகால குறுகிய கால செயற்திட்டங்களை தீட்டியுள்ளோம் எனவே தமிழீழ மீட்பு நிதிக்கு உங்கள் பங்களிப்பை தரவேண்டும். சகல தமிழ் குடும்பங்களும் பங்காளிகளாக மாறவேண்டும்,

## வாசகர்கள், விற்பனையாளர் விளம்பரதாரர்களுக்கு
# ஓர் அறிவித்தல்

'ஈழநாடு' அலுவலகம், பல சிரமத்தின் மத்தியில் தனது வழக்கமான இடத்திலேயே

(63, சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.)

தொடர்ந்து இயங்கிவருகிறது என்பதையும், 'ஈழநாடு' அலுவலகம் இடம்மாறவில்லை என்பதையும் வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் கவனத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி
'ஈழநாடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியாவில் சிவில் நிர்வாகம்:

# அதிகாரிகள் குழு இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரச அதிபர் திரு. ச. பத்மநாதன் தலைமையில் சுமார் 40 அதிகாரிகள் இன்று திங்கட்கிழமை அங்கு செல்வார்கள்.

வவுனியாவில் அகதிகளாக உள்ள சுமார் ஒரு லட்சம் மக்களுக்கு தேவையான நிவாரண வேலைகளைச்செய்து அவர்கள்கஷ்டத்தைப்போக்கவேண்டிய பொறுப்பு எங்களிடம் உள்ளதாக அரசாங்க அதிபர் நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடந்த அதிகாரிகள் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில்; அகதிகளின் கஷ்டத்தைப் போக்குவதுடன், எங்கள் நகரத்தைப் பாதுகாக்கவேண்டியவர்களும் நாங்கள்தான் என்றுர்.

வவுனியா நகரை கட்டி எழுப்ப யாவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள்விடுத்தார்.

இன்று சகல அதிகாரிகளும் வவுனியா செல்வதென்று இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டது.

## "படையினரால் கைதான 50 பல்கலைக்கழக மாணவரை ஒப்படைக்க கோருகிறேம்"

[யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பிலிருந்து கடந்த மாதம் 14-ம் தேதி யாழ்ப் பாணம் நோக்கிவந்த 50 பல்கலைக்கழக மாணவர்கள் இடைநடுவில் ஸ்ரீலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அறிகின்றேம். இவர்களுக்கு என்ன நேர்ந்துள்ளது என்பதுபற்றி நாம் கவலை கொண்டுள்ளோம், இவர்கள் பாதுகாப்பாக எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருகிறேம்.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ஸ்ரீலங்கா இனவாத அரசு இன்று தமிழ்பேசும் மக்கள் மீது முழு அளவிலான யுத்தமொன்றை நடாத்திக்கொண்டிருக்கின்றது. வட-கிழக்கு பகுதி முழுவதிலும் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் சிங்களப் படைகளினுலும் சிங்களக் காடையர்களினுலும் கொல்லப்பட்டுவிட்டனர்

கிழக்கு மாகாணமான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பெருந்தொகையான தமிழ்பேசும் மக்கள் படுகொலை செய்யப்படுகிருர்கள். எஞ்சியவர்கள் அடித்து விரட்டப்படுகிருர்கள்.

தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிருர்கள் பாடசாலைகள், ஆலயங்கள்மீதும் விமானக்குண்டு வீச்சுக்களும் கடற்படைக் கப்பல்களிலிருந்து பீரங்கித்தாக்குதல்களும் இராணுவமுகாம்களிலிருந்து 'ஷெல' தாக்குதல்களும் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வட-கிழக்கு பகுதிமீது பொருளாதாரத் தடையை விதித்து தமிழ்பேசும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குமாறு திட்டமிட்டு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவைகளெல்லாம் ஸ்ரீலங்கா அரசினுல் திட்டமிட்டு நடாத்தப்படும் தமிழ்இன அழிப்பு நடவடிக்கைகள் என்பதே பல்கலைக்கழக மாணவர்களாகிய எமது நிலைப்பாடாகும்.

ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய இனவெறிச் செயல்களை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றேம்.

அத்துடன் ஸ்ரீலங்கா அரசினுல் திட்டமிட்டுத் தடுக்கப்பட்ட தமிழ்மக்களுக்கான உணவு, மருத்துவ, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை நேரடியாகவே கொண்டுவந்து வட-கிழக்கில் விநியோகிக்குமாறு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களைகேட்டுக் கொள்கின்றேம்.

இவ்விதமாக தமிழ்பேசும் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை நிறுத்துமுகமாக ஸ்ரீலங்கா அரசிற்கு நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் கோரி நிற்கின்றேம்

### தாவடி
## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து கடந்த வியாழக்கிழமை நண்பகல் அளவில் ஏவப்பட்ட 'ஷெல்' தாக்குதலினுல் தாவடி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை கணேசபிள்ளை என்பவரின் வீடு சேதமடைந்தது. வீட்டின் கூரைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் மதில் பகுதியிலும் சிறிதளவு சேதம் ஏற்பட்டது. வீட்டிலிருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டனர்.

## "பொருளாதாரத் தடையினுல் மக்களுக்கு பட்டினிச்சாவை அரசு ஏற்படுத்தியுள்ளது"

### மாணவர் அவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்ட இதே வேளையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப் பட்டிருக்கும் பொருளாதாரத் தடையானது அப்பாவிப் பொதுமக்களின் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய அவலநிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தமிழ் பகுதியில் போர் விமானங்களினுலும் ஹெலிகொப்டர்களினுலும் நடாத்தப்படும் தொடர் குண்டுவீச்சுக்களை நாம் வன்மையாக கண்டிக்கிறேம். அதிகரிக்கும் பதற்றமும், வன்முறையும் நிலைமையை மேலும் சீர்குலைப்பதோடு பொதுமக்களின் மனதில் தம் நிலைபற்றிய பீதியை வலுவடையச் செய்கின்றன. அப்பாவிப் பொதுமக்கள் மீது திட்டமிடப்பட்ட முறையில் திணிக்கப்பட்டிருக்கும் இத்தகைய இரக்கமற்ற செயல்கள் இன ஒழிப்பு முறையாக அமைவதோடு இத்தகைய செயல்களை எவ்வகையாலும் யாராலும் நியாயப்படுத்த முடியாது.

இத்தகைய சூழ்நிலை பொதுமக்களின் அவஸ்தையை அதிகரிக்குமேயன்றி பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்ளாது எல்லாப் பிரச்சனைகளுக்கும் நியாயபூர்வமான முறையில் தீர்வைகாண்பதே சிறந்தது.

### யாழ்.நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையில் ''பொம்பர்'' தாக்குதலால் நீர் குழாயில் ஏற்பட்டுள்ள பாரிய சேதத்தை சீர்செய்வதற்கு நாம் முயன்று வரும் வேளையில், கோட்டை முகாமிலிருந்து அவ்வப்போது ஏவப்படும் ''ஷெல்'' தாக்குதலாலும், துப்பாக்கி வேட்டுகளாலும், எமது தொழிலாளர்கள் பாதுகாப்பாக வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இருந்தும், நாம் விடா முயற்சியுடன் திருத்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றேம். இம் மாத இறுதிக்குள் வழமைபோல நீர் விநியோகம் யாழ். நகரில் ஏற்படக் கூடிய நிலையை எமது ஊழியர்கள் ஏற்படுத்தி விடுவார்கள்.

திருநெல்வேலியில் இருந்து இருகுழாய்களில் வரும் நீர் குழாய்களில் ஒன்று மட்டுமே சேதமடைந்துள்ளது. சேதமடையாத பகுதியால் வரும் நீர் குருநகர் பகுதி முழுவதும் எதுவித தடையுமின்றி விநியோகிக்கப்பட்டுவருகின்றது எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (வி)

### இன்று

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளையில் கடமையாற்றிய ஊழியர்களை இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி கிளைக்கு சமுகமளிக்குமாறு மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம் கேட்டுள்ளார்.

### யாழ். குடாநாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கித் தாக்குதல்களும் இடம்பெறும் அதே வேளையில், பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவப் படையினர் குடாநாட்டின் உட்பதிகளை ஊடறுத்து முன்னேறும் திட்டம் இதுவாகும் என்று அறியப்படுகிறது.

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையின்போது ஐந்து பொதுமக்களை இராணுவததினர் சுட்டுக் கொன்றுள்ளனர். பல வாகனங்கள், வீடுகள் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன.

அம்பாறையில் குருத்தலாவ என்னுமிடத்தில், மங்களஓயா பகுதியிலும் விடுதலைப் புலிகளினுல் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளில்சிக்கிய இராணுவத்தினர் அதே இடத்தில் பலியாகியுள்ளனர்.

இப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை.

மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில், தமிழ்பேசும் மக்கள் படுகொலைகளுக்கு அஞ்சி ஓடிவிட்டதால், அங்கு மிஞ்சியுள்ள சிங்கள மக்கள் பாதுகாப்பு படையினரை வரவேற்று அவர்களின் உதவியை நாடியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் மறைவிடங்களை இராணுவத்தினருக்குக் காட்டிக்கொடுப்பதில் இம்மக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

### பஸ் ஊழியர்கள்
## இன்று சமுகமளிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களையும். ஊழியர்களையும் இன்று 9-ம் திகதி திங்கட்கிழமை காலை அவர்கள் கடமையாற்றிய சாலைகளில் சமுகமளிக்குமாறு வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. இ. கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## செயலக ஊழியர் சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக ஊழியர் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

## பல்கலைக் கழக மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவருக்கான பொதுக்கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாக அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### "சனசமூக நிலயங்க்ள்
## பதுங்கு குழிகளை அமைத்து மக்களைக் காக்க வேண்டும்"

### உள்ளூராட்சி ஆணையாளர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் யாவும் தமது பகுதிகளில் கூட்டுறவு முறையில் பதுங்கு குழிகளை அமைத்து மக்களுக்கு உதவுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் திரு, சு. டிவகலாலா கேட்டுள்ளார்.

கொடிகாமம் பிரதேச சபை காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறுகூறினுர்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், ''நெருக்கடியான ஒரு கட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறேம் இந்த நெருக்கடி மத்தியிலும் நாம் வாழப்பழக வேண்டும். இதற்காக சனசமூக நிலையங்கள் அயராது உழைக்கவேண்டும். குறைந்தது பத்து உறுப்பினர்களாவது ஒரு நிலையத்திலிருந்து முதலுதவிப்பயிற்சி பெறவேண்டும். அத்துடன் எமது உணவுத் தேவைகளை நாமே நிறைவேற்றுவ்தற்காக வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். ஆடம்பரத் தேவைகளை குறைத்து அத்தியாவசியமான தேவைகளையே பூர்த்திசெய்ய வேண்டும். நல்ல சுகாதார பழக்க வழக்கங்களை மேற்கொள்வதன் மூலம் மருத்துவ தேவைகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

### யாழ். மாவட்டத்தில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வில் வருவதினுல் அகதிகளுக்கான உணவு விநியோகத்தைத் திட்டமிட்டபடி நடைமுறைப் படுத்துவது சிரமமாக இருப்பதாக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் போதிய வசதியீனங்கள் இன்மையால். பெரும்பாலான அகதிகள் தத்தமது உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருப்பதினுல், இவர்களுக்கான உணவு விநியோகங்கள் மறுக்கப்படுவதாகவும், இதுபற்றி அவ்வப் பகுதி கிராமசேவர்களிடமும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயங்களிலும் கேட்கப்பட்டால் அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது, அரசாங்க அதிபரிடம் கேட்கும்படி கூறி கைவிரித்து விடுவதாகவும், வீடுகளில் தங்கியிருக்கும் பெரும்பாலான அகதிகள் [illegible]

### கட்டுவன் நோக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் சந்தியை நோக்கி புறப்பட்டதையடுத்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

அரை மணித்தியாலத்திற்கு மேல் இடம்பெற்ற இத்தாக்குதல் நடவடிக்கையில் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவத்தினர் இறந்தவர்களையும், படுகாயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு முகாமிற்குள் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் முகாமிற்குள் சென்றதைத்தொடர்ந்து முகாமிலிருந்து புலிகள் பக்கம் ஷெல் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இத்தொடர்ச்சியான ஷெல் தாக்குதலின் போது திலீப், எல்பிட் ஆகிய விடுதலைப் புலிகள் காயமடைந்தனர். (56)

## 70 ஏக்கரில் பம்பாய் வெங்காய .செய்கை

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் சுமார் 750 ஏக்கரில் பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அராலியில் மாத்திரம் சுமார் 350 ஏக்கரில் பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் ஊக்கத்திஞலும் உதவியிஞலும் சங்க உறுப்பினர்கள் இச்செய்கையில் ஈடுபட்டு அதிக வருவாயைப் பெற்று வருகின்றனர். (139)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org